# இன்றைய அடிமை..

ஜெனோ மோகன்
சமூகச் செயல்பாட்டாளர்





ஒவ்வொரு பெண்ணும் ஏதோ ஒருவிதத்தில் அவர்களுக்குப் புரிந்தோ புரியாமலோ வன்முறைக்கு ஆளாகி அவற்றை ஏற்றுக்கொண்டும் சகித்துக் கொண்டும் இருக்கிறார்கள்

அண்மையில் பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்த ஒரு கலந்துரையாடல் நிகழ்வு. பெண்கள் மட்டுமே பங்கேற்பாளர்கள். இதில் கருத்துரையாளர், "குடும்ப வன்முறைக்கு ஆளானவர்கள் கையை உயர்த்துங்க" என்றார். ஒருவர்கூட கை உயர்த்தாமல் அசையாதிருந்தனர். இதை எப்படி எடுத்துக்கொள்வது? நெடுங் காலமாக குடும்ப வன்முறை என்பது அனைத்துப் பெண்களுக்கும் பொதுவான ஒரு சாபக்கேடாக இருக்கும் பட்சத்தில் எந்தவொரு பெண்ணும் இதுபோன்ற வன்முறைகளுக்கு ஆளாகாமல் இருக்க முடியாது. ஆனால், இதனை வெளியில் சொல்ல அனைவருக்குமே தயக்கம். காரணம் வெளியில் சொன்னால் பாதிக்கப் பட்டவர்களை இந்த சமூகம் பார்க்கும் பார்வையே வித்தியாசமாக இருக்கும். ஒரு சிறு அரங்கத்திற்குள்ளே இந்த நிலை என்றால் பொது வெளியில் இந்த பெண் சமூகம் எப்படி இருக்கும். ஒவ்வொரு பெண்ணும் ஏதோ ஒருவிதத்தில் அவர்களுக் குப் புரிந்தோ புரியாமலோ வன்முறைக்கு ஆளாகி அவற்றை ஏற்றுக்கொண்டும் சகித்துக்கொண்டும் இருக்கிறார்கள் என்பதுதான் எதார்த்தமான உண்மை.

பெண்களைப் பாதுகாக்க எத்தனை சட்டங்கள், திட்டங்கள் வந்தாலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. பெண்களை அடக்கி, ஒடுக்கி கீழ்மைப்படுத்தும் எந்த ஒரு சொல்லும், செயலும், சிந்தனையும், அதிகாரமும், நிகழ்வும் வன்முறையே. பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தனிநபர் வன்முறை மற்றும் கூட்டு வன்முறை என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

**கூட்டு வன்முறை :** பெண் தெய்வங்கள் அதிகமிருக்கும் பூமியும் இதுதாம். பெண்ணைப் பற்றி அதீதமாய் பாடிய, பேசிய, எழுதிய நாடும் இதுதாம். கடந்த ஆண்டு மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடியினப் பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு சுற்றிலும் ஆயுதம் தாங்கிய ஆண்கள் மத்தியில் ஊர்வலமாக இழுத்துச் சென்று கூட்டுப் பாலியல் வன்முறை செய்த கொடூரத்தை நாம் சமூக வலைதளங்களில் பார்த்தோம். இடஒதுக்கீட்டி லிருந்து இன மோதல் வரை வன்முறையாளர்களின் முதல் இலக்கு பெண்கள்தான். எப்போதுமே சம்பவங்கள் நடக்கும்போது மட்டும் அங்கொன் றும் இங்கொன்றுமாக விவாதங்கள் எழுவதும், போராட்டங்கள் வெடிப்பதும் பின்பு அதைப்பற்றி கண்டுகொள்ளாமல் அப்படியே விட்டுவிட்டு இயல்பு நிலைக்குத் திரும்புவதும் வழக்கமாகி வருகிறது.

**குடும்ப வன்முறை :** பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் குடும்ப வன்முறை என்பது முக்கிய இடம் வகிக்கிறது. ஒரு குடும்பத்தின் ஆண் உறுப்பினர்கள் அல்லது அவர்களைச் சார்ந்த நபர்களால் பெண்களுக்கு நிகழும் உடல்ரீதியான, மனரீதியான, பாலியல்ரீதியான, பொருளாதார ரீதியான ஒடுக்குதலும், அச்சுறுத்தலும் குடும்ப வன்முறையாகும். உலகளவில் மூன்றில் ஒரு பெண், தனது குடும்ப உறுப்பினர் அல்லது நெருங்கிய நட்பு வட்டாரத்தால் வன்முறைக்கு உள்ளாக்கப் படுகிறாள் என்கிறார் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளராக இருந்த கோபி அன்னாண். குறிப்பாக, இந்தியச் சமூகத்தில் இந்த வன்முறை யானது தொடர் நிகழ்வாகவே உள்ளது. ஆண்கள் எல்லாரும் சுதந்திரமாகப் பிறக்கின்ற சூழலில் ஒரு பெண் பிறப்பிலேயே அடிமையாகப் பிறக் கிறாள். தந்தைக்கு அடிமையாக, சகோதரர்களுக்கு அடிமையாக, பின் கணவனுக்கு அடிமையாக, அதனைத் தொடர்ந்து பெற்ற பிள்ளைகளுக்கு அடிமையாக வாழும் நிலை இன்றளவும்

தொடர்கிறது. மிரட்டுதல், பாலியல் துன்புறுத் தல், தனிமைப்படுத்துதல், பொருளாதார ரீதியாக ஆணின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல், காயம் ஏற்படுகின்ற வகையில் அடித்து துன்புறுத் துதல், உளவியல் ரீதியாக தற்கொலை செய்யும் அளவிற்கு நெருக்கடி அளித்தல், வற்புறுத்துதல், கட்டாயக் கருக்கலைப்பு, வரதட்சணை, ஆணவக் கொலை ஆகிய பல வடிவங்களில் குடும்ப வன்முறை வெளிப்படுகிறது.



**ஆணவப் படுகொலைகள் :** பிற சாதியைச் சார்ந்த ஆண்களைக் காதலித்து திருமணம் செய்யும் பெண்கள் சாதி கவுரவத்தைச் சுட்டிக்காட்டி தனது பெற்றோரால் அல்லது குடும்ப உறுப்பினர்களால் படுகொலை செய்யப்படுவது சமீப காலமாக அதிகரித்து வருகிறது. வட இந்தியாவில் காப் பஞ்சாயத்தும், தென்னிந்தியாவில் கட்டப் பஞ்சாயத்தும் இதில் முக்கிய பங்காற்றுகின்றன.

**பணியிடங்களில் பாலியல் வன்முறை :** இன்று பெண்கள் பல்வேறு தடைகளைத் தாண்டி உயர் கல்வி கற்று எல்லாத் துறைகளிலும் பணிபுரிகிறார்கள். அவர்கள் எந்த நிலைக்கு உயர்ந்தாலும் பெண் என்பதாலேயே ஒடுக்கப்படுகிறார்கள். அவர்களின் கல்வியறிவு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கேற்ப அவற்றைத் தடுக்கும் வன்முறைச் சக்திகளும் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. பெண்கள் பணிபுரியும் இடங்களில் உடன் பணிபுரியும் ஆண் பணியாளர் கள் மற்றும் மேலதிகாரிகளால் பெண்கள் பாலியல் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

**சார்பு வன்முறை :** படித்துப் பட்டம் பெற்று பெரிய பதவியில் இருந்தாலும், வயதுக்கு வந்த ஒரு பெண் வெளியே எங்குசென்றாலும் துணைக்கு ஓர் ஆண் சிறுவனையாவது அழைத்துச் செல்ல வேண்டிய சார்பு வன்முறைக்கு நிர்பந்திக்கப் படுகிறாள். நவீன வளர்ச்சியில் பல முன்னேற்றங்கள் மாற்றங்கள் வந்தாலும்கூட ஆணைச் சார்ந்தே பெண் இயங்க வேண்டும் என்கிற அறிவிக்கப்படாத நெடுங்கால நிலை இன்னும் மாறவில்லை.

**சமூக வலைதள வன்முறை :** இன்றைய மின்னணுத் தொழில்நுட்பமானது புதிய உலகத்திற்கான கதவைத் திறந்து விட்டிருக்கிறது. நம்முடைய உடல் உறுப்புகளில் ஒன்றாக அலைபேசி ஒன்றிப் போய்விட்டது. அதில் சமூக ஊடகங்களின் பயன்பாடும் தவிர்க்க முடியாதவைகளாக மாறிவிட்டன. உலகின் எந்த மூலையில் நடக்கக்கூடிய நிகழ்வுகளை உள்ளங்கையில் தெரிந்துகொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்டதே இந்தத் தொழில் நுட்பம். இதில் பல வசதிகள் இருந்தாலும் பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்களும் அதிகரித்துள்ளன. அந்த வகையில் ஆறு நிமிடத்திற்கு ஒரு பெண் இவ்வகையான வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதாக ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. பொழுது போக்கிற்காக பெண்கள் பகிரும் புகைப் படங்களும், வீடியோக்களும் இன்று அவர்களின் வாழ்க் கையைச் சீரழிப்பதற்கு காரணமாகி வருகிறது.

## பயிற்சிகள் - செயல்பாடுகள்

குடும்ப வன்முறை என்பது சமூகப் பிரச்சனை. அதனைத் தடுப்பதற்காக 1994இல் குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் கொண்டு வரப் பட்டது. மேலும், பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளைப் பாதுகாக்க மத்திய அரசால் 2018ஆம் ஆண்டு முதல் பல்வேறு இடங்களில் "ஒரு நிறுத்த மையத்திட்டம்" (One stop centre) செயல்பட்டு வருகிறது. இந்த மையமானது, பாதிக்கப்பட்ட பெண்களுக்கான பாதுகாப்பை வழங்குவதோடு, அவர்களுக்கு நீதி கிடைக்க சட்ட ரீதியான ஆலோசனைகளையும் வழங்குகிறது. அதோடு சமரசத்திற்கான வழிகாட்டுதல் மற்றும் மனரீதியான ஆற்றுப்படுத்தல்; போன்ற பல பணிகளையும் செய்து வருகிறது.

## கண்காணிப்புக் குழுக்கள்

விசாகா கமிட்டி தொடர்ந்த வழக்கில் 1997இல் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் சீண்டல்கள் மற்றும் வன்முறைகளை தடுக்க பல்வேறு பரிந்துரைகளை வழங்கியது. விசாகா கமிட்டியானது அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், ஒப்பந்த ஊழியர், ஊதியம் இல்லாமல் தன்னார்வமாகப் பணிபுரிபவர்கள் ஆகிய அனைவருக்கும் இந்தக் குழுவின் கண்காணிப்பை உச்சநீதிமன்றம் அவசியமாக்கியது. இதனடிப்படையில் 2013இல் பணியிடத்தில் பாலியல் வன்முறை தடுப்புச் (தடுப்பு, பாதுகாப்பு, குறை தீர்ப்பு) சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டமானது கட்டடத் தொழிலாளர்கள், வீட்டு வேலை செய்யும் பெண்கள், அமைப்பு சாரா தொழிலாளர்கள், பயிற்சி பெறும் பணியாளர்கள் ஆகிய அனைவரையும் உள்ளடக்கியது. மேலும் பாலியல் வன்முறை என்பது ஒரு பெண்ணை உடல் ரீதியான பாலியல் சீண்டலுக்கு சித்திரவதைக்கு உட்படுத்துவது மட்டுமல்ல. ஆபாசப் படங்கள், வீடியோ மற்றும் சைகைகள் காட்டுவதையும் உள்ளடக்கியது. எனவே, பணியிடத்தில் பெண்களைப் பாதுகாத்து வன்முறைகளுக்குத் தீர்வு காணும் வகையில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் உள் புகார் குழு அமைத்து, அக்குழுவில்



பெண் ஒருவரைத் தலைவராக நியமிக்க இச்சட்டம் வலியுறுத்துகிறது. இந்தக் குழுவானது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடி பெண்களுக்கு எதிராக நடக்கும் பிரச்ச னைகள் குறித்து ஆலோசனை நடத்துகிறது.

## உறுதிப்படுத்தும் செயல்பாடுகள்

பெண்கள் தங்களது பிரச்சனைகளை வாய்மொழி யாகக் கூறும் அளவுக்கு சட்ட நடவடிக்கைஎடுப்பதற்கு ஏற்றாற்போல் எழுத்துப்பூர்வமாக புகார் அளிக்க முன்வரு வதில்லை. ஏனென்றால், பாதிப்புக்குள்ளான பெண்ணையே குற்றவாளியாகப் பார்க்கும் மனநிலை இச்சமூகத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது.

எனவே, பெண் ஆண் சமம் என்ற புரிதலை ஆண் பெண் இருவரும் பெற வேண்டும். ஒரு பெண் தனக்கு நடந்த குற்றங்களைத் தைரியமாக வெளியில் சொல்லும்போது அவரை ஆதரிக்க சமூகம் முன்வர வேண்டும். சமூக விழிப்புணர்வு, மனநலப் பயிற்சிகள் பெண்களுக்கு மட்டுமல்லாது ஆண்களுக்கும், அதிகாரிகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்குத் தீர்வுகாண பல சட்டங்கள் இருந்தாலும் அவை சம்பந்தப்பட்டவர் களைச் சென்றடைய போதிய வழிவகை செய்ய வேண்டும். சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வோடு, புகார் அளிப்பவர்களுக்கு பாதுகாப்பை அரசு உறுதி செய்யவேண்டும். சட்டங்களை சரியான முறையில் நடைமுறைப் படுத்த அரசும், ஆட்சியாளர்களும் தொடர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கெல் லாம் இன்றைக்கு வாய்ப்பிருக்கிறது.

பெண்களின் வறுமை மற்றும் சமத்துவமின்மை யைக் கையாள்வதற்கான முயற்சிகளை பெண்ணிய அமைப்புகள் முன்னெடுத்து வருகின்றன. இந்த சர்வதேச மகளிர் தினத்தில், இந்த சவால்களை வாய்ப்புகளாக மாற்றவும், அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தை வடிவமைக்கவும் பெண்களாகிய நாம் ஒன்றிணைவோம்! தொடர் படிப்பும், உயர் பதவிகளில் அமர்வும், அரசியல் ஈடுபாடும் இன்றைக்கு நமக்கு சாத்தியமாகி வருகிறது. ஆளுமைத்திறன் என்பது ஒரு சிக்கலான பிரச்சனையில் மனம் தடுமாறாது அதைத் தீர்க்க முயற்சிப் பதும், கைமீறிப் போய்விட்ட விஷயங்களைத் சாதுர்யமாகக் கையாளுவதும் தான். இந்த விஷயத்தில் ஆண்களை விட நாம் தான் திறமைசாலிகள். தடைகள் இல்லாமல் இல்லை. தடைகளைத் தகர்த்தெறிந்து எழுந்து சுடர் விடட்டும் இன்றைய பெண் ஆளுமை.


## Form IV

Statement about ownership and Other Particulars about the Periodical
**Namadhu Manvasam**
*(Tamil Monthly)*

1. *Place of Publication* : **Madurai**
2. *Periodicity of its publication*: **Monthly**
3. *Printer's Name* : **A. Dhanasekaran**
   *Nationality :* **Indian**
   *Address :*
   103, Jawaharlal Nehru Road,
   Sivakasi - 626 123.
   Tamilnadu.
4. *Publisher's Name* : **V. Venkatesan**
   *Nationality* : **Indian**
   *Address* :
   Reflection Publications Trust,
   1A, Vaidhyanathapuram East,
   Kennet Cross Street,
   Madurai - 625 016
   Tamilnadu.
5. *Editor's Name* : **B. Thirumalai**
   *Nationality* : **Indian**
   *Address* :
   57, 3rd Street,
   Vasantha Nagar,
   Madurai - 625 003.
   Tamilnadu
6. *Names and addresses of Individuals who own the newspaper and partners of shareholders holding more than one percent of the total capital* : **NA**

I, V. Venkatesan hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Madurai *Signed*
21.02.2024 *Signature of Publisher*